# அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் தலைமை நிர்வாகம்.

Annai poopathi Tamilsk Kultursenter sentralstyre
Annai poopathi Tamil Cultural Centre Central committee

30.05.2025

வணக்கம்!

அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூட. உறுப்பினர்களுக்கான முக்கிய அறிவிப்பு !

எமது அங்கத்தவர்கள், அங்கத்தவர்களின் பெற்றோர் மற்றும் திறம்மன் வளாக ஆசிரியர்களுக்கு அன்பான வணக்கம்,

மாணவர்களின் கல்வித்தரம் மற்றும் வளாகத்தின் அமைதியான வளர்ச்சிக்காக, அனைவரும் ஒன்றிணைந்து, ஒழுங்கான, சரியான வழிமுறையில் செயற்படுவதே இன்றைய தேவையாகும்!

**நாம், திறம்மன் நிருவாக உறுப்பினர்களைப் பல வழிகளிலும் தொடர்புகொண்டு கூட்டம் ஒன்றை ஒழுங்குபடுத்துமாறு பல முறை வேண்டிநின்றோம். ஆயினும், இவற்றிற்கு எந்தவிதமான பதிலும் எமக்குக் கிடைக்கவில்லை. பிள்ளைகளின் கற்பித்தல் செயற்பாடுகளை நேர்த்தியாக அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தில் முன்னெடுக்க ஆக்கபூர்வமான கருத்துகளுடன் சந்தித்து, கலந்தாலோசித்து தீர்க்கமான, சுமூகமான முடிவுகளை எடுக்க வேண்டிய தேவையுள்ளது என்பதை தங்கள் நிருவாகத்தினருக்குச் சுட்டிக்காட்டினோம். ஆயினும், இதற்கான பதில் எதையும் வழங்காது தட்டிக் கழித்து வந்துள்ளனர்.**

வளாகத்தில் அண்மைக் காலமாக ஏற்பட்டுள்ள தேவையற்ற புறச்சூழல்கள் தங்களைப் பலவித சிந்தனையில் இட்டுச்சென்றிருக்கும் என்று எண்ணுகிறோம். தேவையற்ற நிலைப்பாடுகளும், தேவையற்ற கூட்டுச் சதித்திட்டங்களுடன் நடைபெறும் நடவடிக்கைகளுக்கு, நிறுவன கட்டமைப்புகளுக்கேற்ப தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது எமது பொறுப்பாகும்.

ஒருபக்க சார்பான நிலைப்பாட்டிற்கு திறம்மன் அங்கத்தவர்களைக் கொண்டு சென்று, கல்வி நடவடிக்கைகளைக் கேள்விக்குறியாக்கும் நடவடிக்கைகளை முன்னாள் வளாகப் பொறுப்பாளரால் செயற்படுத்தப்பட்டு வந்துள்ளதை நாம் அறிந்தோம்.

ஒரு நிறுவனத்தின் நிருவாக உறுப்பினர்கள் அதன் நடைமுறைகள் மற்றும் விதிமுறைகளைப் பின்பற்றுவது அகத்தியமாகும். நோர்வேயில் தனிப்பட்ட மற்றும் பொது நிறுவனங்களில் விதிமுறைகளைப் பின்பற்றுவது வழக்கமானதாகும். அதே போன்று அன்னையின் நடைமுறைகளிலும் விதிவிலக்குக் கிடையாது.

அன்னையின் நிறுவன விதிமுறைகளுக்கும், யாப்பு விதிமுறைக்கும் இணங்க முடிவெடுத்து, ஆரோக்கியமான முறையில் நிறுவனத்தை நடத்துவது அனைவரினதும் கடமையாகும். எனவே கூட்டு நிறுவனமான அன்னையின்  நிறுவனப் பண்புகளை நடைமுறைப்படுத்தும் வகையில் விரைவில் நாம் பல தீர்மானங்களை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என்பதைத் தங்களுக்கு கடந்த பெப்ரவரி மாதம் தெரிவித்துவிட்டு, இன்றைய இந்த நிர்வாகமாற்றத்தைப் பதிவுசெய்துள்ளோம்.

முக்கிய விடயங்கள்:
கடந்த காலங்களில் பொறுப்பாளராகச்  செயற்பட்டவர், அன்னையின் யாப்பு மற்றும் நிறுவன விதிகளையும் மீறி செயற்பட்டு வந்ததுடன், தன்னிச்சையான முடிவுகளையும் எடுத்து நிறுவனத்தைத் தவறான பாதையில் இட்டுச் செல்ல முயற்சி செய்துவந்துள்ளார். இவ்விடயத்தை நாம் தனிப்பட்டமுறையிலும் தங்கள் வளாகச் சந்திப்பிலும் தட்டிக்கேட்ட போது, அதற்குப் பதிலளிக்கமுடியாமல் தான் பொறுப்பிலிருந்து விலகுவதாக எமக்குக் கடிதம் அனுப்பியிருந்தார்.

இவரால் மீறப்பட்ட பல விதிமுறைகளுள் சிலவற்றைத் தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

1. உறுப்பினர் தகுதி:

• இவர் அன்னையின் உறுப்பினராகச் சேர வேண்டும் என்பதே நடைமுறையாகும். அதற்கான சில விதிமுறைகளை இவர் கடைப்பிடிக்க மறுத்துள்ளார்.

• அங்கத்துவராக இணைவதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளார்.

2. தகவல் பாதுகாப்பு:

• 18 வளாகங்களிலும் நடைமுறையாக பின்பற்றப்படும் இரகசியங்களைப் பேணும் Taushetserklæring ஐ ஏற்று ஒப்பமிடுவதில் இவர் மறுத்ததோடு, மற்றவர்களையும் இவ்விடயத்தில் தடுப்பது போன்ற செயல்களில் ஈடுபட்டு வந்துள்ளார்.

3. தவறான தகவல்களைப் பரப்புதல்:

• இவர், அன்னை பூபதி திறம்மன் வளாகப் பொறுப்பாளராக இருந்தபோது அன்னைக்கு எதிரான கருத்துக்களையும் உண்மைக்கு புறம்பான தகவல்களையும் வெளியில் பதிவிட்டுள்ளார்.

• இதைத் தொடர்ந்து, அன்னையின் உறுப்பினர்களிடமும், பெற்றொர்களிடமும் தவறான தகவல்களைப் பரப்பி வந்துள்ளார்/வருகின்றார். இவைபற்றி  நேரில் தங்களுடன் உரையாடுவதற்கு கூட்டம் ஒன்றை ஒழுங்கு படுத்தப் பல முறை கேட்கப்பட்டும் தட்டிக் கழிக்கப்பட்டு வந்துள்ளது.

நிறுவனத்தின் எதிர்பார்ப்புகள்:

• குழந்தைகளின் மொழி வளர்ச்சிக்கும், கற்றலுக்கும் இடையூறுகளைத் தவிர்க்க வேண்டும்.

• வளாகங்களை அன்னையின் ஒழுங்குமுறை விதிமுறைகளுக்கு அமைவாக நடத்திச் செல்வது அனைத்து உறுப்பினர்களின் தார்மீகப் பொறுப்பாகும்.

எனவே இவற்றைக் கருத்திற்கொண்டு அன்னை தலைமை நிர்வாகம், திறம்மன் வளாகத்தினை சீராக நடத்துவதற்காக சில தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்கத் தீர்மானித்து, முதற்கட்டமாக நோர்வேஜியப் பதிவகத்தில் நிர்வாக மாற்றத்தினைப் பதிவுசெய்துள்ளது.

தொடர்ந்து அங்கத்தவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அங்கத்தவர்களின் பெற்றோருடன் சந்திப்பினை ஏற்படுத்தி, நேர்த்தியாக அன்னையின் யாப்புவிதிகளையும் நோர்வேஜிய சட்டவிதிகளையும் பின்பற்றி, மாணவர்களின்  கல்விக்கு வலுச்சேர்க்கும் தகுந்த நிர்வாக உறுப்பினர்களை உங்கள் மத்தியில் இனங்கண்டு, அன்னையுடன் இணைந்து பயணிக்க வேண்டும் என அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.

தற்போது திறம்மன் நிர்வாகப்பொறுப்பினை அன்னை தலைமை ஏற்றுள்ளது. திறம்மன் வளாக எதிர்காலச் செயற்பாடுகள் சார்ந்து வளாகப் பெற்றோருடன் இணைந்து கலந்தாலோசித்து ஆரோக்கியமான முடிவுகளை எட்டுவதற்காக WhatsApp குழுமம் ஒன்று விரைவில் உருவாக்கப்படும்.

இதுபற்றிய தங்கள் ஆரோக்கியமான கருத்துகளை எம்மிடம் உரிமையோடு பகிர்ந்துகொள்ளலாம்.

தொடர்பு கொள்வதற்கு: 40721201 / 40721239
மின்னஞ்சல்: annai@annai.no

"தமிழ் எங்கள் அடையாளம்"

நன்றி.

இவ்வண்ணம்
தலைமை நிருவாகம் 2025
அன்னை பூபதி  தமிழ்க் கலைக்கூடம்.